யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 29 ஷஃபா 1 இதழ் 60

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11-4-1986

## ஜே. ஆரின் ஆலோசனையோடு தொண்டா' இந்தியா பயணம்

(கொழும்பு)

''நான் இன்று இந்தியாவுக்கு மேற்கொள்ளும் விஜயம் பற்றி ஜனதிபதி திரு. ஜெயவர்த்தனவுடன் கலந்தாலோசித்துள்ளேன். இவ்விஜயத்தின் போது நான் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களையும், தமிழ்த்தீவிரவாத இளைஞர் குழுக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவிருக்கிறேன்''

இன்று அதிகாலை இந்தியா புறப்படுமுன்னர் 'ஈழநாடு'க்கு அளித்த பிரத்தியேக பேட்டியின்போது கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவசியம் ஏற்படும் பட்சத்தில் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியையும் இதர



வடஇந்திய அரசியல் தலைவர்களையும் தாம் சந்திக்கக்கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். [ஷ]

## ● இலங்கை இனப்பிரச்னை:

# 'ராஜீவினல் மட்டுமே தீர்வுகாண முடியும்'!

### சமஷ்டி அமைப்பு சாத்தியமில்லையாம்!

(வாஷிங்டன்)

**''இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் முயற்சியின் மேலுமொரு நடவடிக்கையாக இம்மாத இறுதியில் இந்தியத் தூதுக்குழுவொன்று கொழும்பு வரவுள்ளது. எமது நாட்டின் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்தியப் பிரதமர் திரு, ராஜீவ் காந்தியினல் மட்டுமே முடியும்.''**

அமெரிகாவில் நடைபெறவுள்ள சர்வதேச நாயணநிதி மாநாட்டில் பங்குபற்றச் செல்லும் வழியில் வாஷிங்டனில் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது இலங்கை நிதியமைச்சர் திரு ரொனிடிமெல் மேற்கண்டவாறு கூறினர்

இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர் டிமெல் மேலும் கூறியதாவது:

''இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு திரு. ராஜீவ் காந்தி ஆதரவு அளித்துவருகின்றார் என்றகதையை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். ஆனல் தமிழ்நாடு மாநிலத்தவர் அவர்களுக்குஆதரவளித்து வருகின்றனர்.

''தமிழ்த் தீவிரவாதக் கோஷ்டிகளின் தலைவர்கள் அவ்வப்போது விடுத்த அறிக்கைகளைத் தவிர, இலங்கையிலுள்ள போராளிகளுக்கும் லிபியாவுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் சம்பந்தம் உட்டு என்பதை நிருபிக்கக் கூடிய ஆதாரங்களோ, சாட்சியங்களோ எமக்குக் கிடைக்கவில்லை

''இனப் பிரச்னையின் தீர்வு தாமதப்படுவது எமது நாட்டின் பொருளாதாரத்தை மோசமான அளவில் பாதிக்கின்றது. மாகாண ரீதியிலான சபைகள், மந்திரிசபைகள் ஆகியவற்றினை அமைப்பதே இப்பிரச்னைகு ஆகக் கூடியபட்சமான தீர்வாக அமைய முடியும். இலங்கை போன்ற ஒரு சின்னஞ்சிறு நாட்டில் இதைத்தவிர வேறெந்த ஏற்பாடும் நடைமுறைச் சாத்தியமாகாது. முழு அளவிலான சமஷ்டி முறையினை ஏற்றுக்கொள்ளும் நிலையில் நாம் இல்லை.'' [ஷ]

### எங்கே?

[யாழ்ப்பாணம்]

வேலணைப்பகுதியிலுள்ள 9 பாடசாலைகளுக்கு க. பொ. த. [சாதாரண] பரீட்சைப் பெறுபேறுகள் இன்னமும் கிடைக்கவில்லையென்றும் இதனல் மாணவர்கள் பெரிதும் கவலையடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ஒட்டு. நி. மா.]

உப்புவெளியில்

## இரு ராணுவம் பலி! 4 பேர் படுகாயம்

### அரசாங்கம் தகவல்

[திருகோணமலை]

உப்புவெளியைச் சேர்ந்த 3ம் கட்டைப்பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினரின் வாகனங்களில் ஒன்று கண்ணிவெடியில் சிக்கியதால் அவ்வாகனம் முற்றுகச்சேதமடைந்ததுடன் வாகனத்திலிருந்த இருவர் பலியானதாகவும் 4பேர் படுகாயமுற்றதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை மணியளவில் இக் கண்ணிவெடித் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது

உப்புவெளி 3ம் கட்டைப் பகுதியிலுள்ள வீதியில் இராணுவத்தினர் வீதித்தடை போட்டு வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்படுவது தெரிந்ததே

நேற்றுக்காலை இராணுவத்

(5-ம பக்கம் பார்க்க)

பலாலியில் நடைபவனி வந்த

## ராணுவம் சுட்டதில் ஒருவர் பலி! பலர் காயம்!

(மாவிட்டபுரம்)

பலாலி ராணுவ முகாமிலிருந்து பலாலி சந்திவரை நடைபவனியாக வந்த ராணுவத்தினர், பலாலி சந்தியில் வைத்துத் தொடர்ச்சியாகப் பத்து நிமிடங்கள் மேற்கொண்ட சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியானுர். பெண்ணொருவர் படுகாயமடைந்தும், பலர் சிறுகாயங்களுக்குள்ளாகியும் உள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை நடந்த இச்சம்பவத்தில் பலி

[5ம் பக்கம் பார்க்க]

இன்றும் நாளையும்

## யாழ் - வவனியா விசேஷ பஸ்சேவை

[யாழ்ப்பாணம்]

புதுவருடத்தை முன்னிட்டு கொழும்புக்கும் வவனியாவுககுமிடையே இரு ரயில் சேவைகளும், யாழ்ப்பாணத்துக்கும் வவனியாவிற்குமிடையே 15 பஸ்சேவைகளும் நடைபெறவுள்ளன.

இன்றும் நாளையும் நடைபெறவுள்ள இச் சேவையால் பொதுமக்கள் பெரிதும் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது

ரயில்சேவை; அதிகாலை 5-50 க்கு மருதானையிலிருந்து

(5ம் பக்கம் பார்க்க)

### வல்வையில் நேற்று ...

(வல்வெட்டித்துறை)

நேற்றுக் காலையில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து கடற்கரை வழியாக இராணுவத்தினர் வெளியே வரமுற்பட்டபோது காவலிருந்த போராளிகள் கைக்குண்டுகளை வீசித் தாக்கியதைத் தொடர்ந்து இராணுவத்தினர் முகாமுக்குத திரும்பினர் பின்னர் அங்கிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். எனினும் சேதமெதுவும் ஏற்படவில்லை.

## வங்கிமுன் மறியல் இடைநிறுத்தம்

(யாழப்பாணம்)

மக்கள் வங்கியின் வடபகுதிக்கிளை அலுவலகங்கள் முன்னிலையில் தாங்கள் அடகு வைத்த நகைகளை மீளளிக்குமாறு கோரி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அடகு வைத்தோர் சங்கத்தினர் இன்று முதல் ஒருவாரத்துக்குத்தமது மறியல் போராட்டத்தை இடைநிறுத்தி வைத்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக அடகு வைத்தோர் சங்கம விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அடகு நகைகளை மீளளிப்பது சம்பந்தமாக வங்கி நிர்வாகத்

[5ம் பக்கம் பார்க்க]

**நன்றி கூறுகிறேம்**

சுங்கத் திணைக்கள உதவி அதிகாரி திரு. K. K. சுப்பிரமணியம் அவர்களைக் கடத்திச் சென்றவர்கள் கௌரவமாக விடுவித்து உதவியமைக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேம்.

K. K. சுப்பிரமணியம்,
அவர்களின்
மனைவி, மக்கள்,
உறவினர், நண்பர்கள்.

(C 1695)

தலவாக்கொல்லையில்

## 3000 தோ. தொழிலாளர் வேலைநிறுத்தம்!

[தலவாக்கொல்லை]

தலவாக்கொல்லை அக்கரப்பத்தனை தோட்டத் தொழிலாளி ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து நேற்றுமுன்தினம் தொடக்கம் 3000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

அக்கரபத்தனை தோட்டத்தைச் சேர்ந்தஇராமசாமி சின்னத்தம்பி (48 வயது) என்பவார பொலிசாரால் கைது செய்யப்பட்டவராவார்.

தோட்டப்பகுதியில் அண்மைக்காலங்களில்இடம்பெற்ற சசபவங்கள் தொடர்பாகப் பொலிசார் இதுவரைக்கைது செய்ததாகத்தெரியவருகிறது.

## வரி விளம்பரம்

### பயிற்சி

Computer Programming Basic and Cobal ரெலிவிஷன், ரேடியோ, வீடியோ, டெக்ரெக்னேலஜி, எலக்ரிக்கல் வயறிங், வைண்டிங் வகுப்புக்கள் கூடிய நேரசெய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. ஆரம்பம்: 12-4-86 காலை 9-30 விபரங்கட்கு: Jaffna Technical Institute, 52/1, ஸ்ரான்லி றேட், (றெயில்வே கடவைக்கருகாமை), யாழ்ப்பாணம்.

C 1643

### கல்வி

க. பொ. த. [உயர்தர] 88 கலை/வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Modern Education Center, Karaveddy

[C-1669]

### வகுப்புகள்

A/L 88 க்கான விஞ்ஞான வகுப்புக்கள், ஆரம்பம் நிறுவனத்தின் வழமையான பிரபல ஆசிரியர் குழு, திருவாளர்கள்:- மகாதேவா, பத்மநாதன், சிவவீரசிங்கம், சிறீதரன், குணசிங்கம். நேரசூசிகை, மற்றும் கலை வர்த்தக வகுப்பு விபரங்கள் யாவும் நிறுவனத்தில் பெறவும். நாகலிங்கம் இன்ஸ்ரிரியூட், நாவலடி லேன், திருநெல்வேலி மேற்கு.

(C 1701)

### தேவை

லிகிதர்கள், 5ம் வகுப்பிற்கு கற்பிக்கத் தகுந்த ஆசிரியைகள் தேவை. 15-04-86 காலை 9 மணிக்கு நேரில் வரவும். றியல்ஸ் குறுேபின், மானிப்பாய்.

[C 1691]

### விற்பனைக்கு

இரண்டு கிறைன்டிங் மில் இரண்டு மோட்டார், ஒரு அல்லர் விற்பனைக்குண்டு. M. தயாளநிதி, மல்லிகா ஸ்ரோர்ஸ் அருகே, ஆவரங்கால்.

[C 1678]

சங்கானை
ப.நோ.கூ.சங்கம்(வ. உ)

## வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 2300/- வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப் படிவம் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் இடது பக்க மூலையில் ''வெற்றுச் சாக்குகள் கேள்வி'' என எழுதப்பெற்று, பொதுமுகாமையாளர், சங்கானை பல நோக்குச் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 18-4-86.

**பொதுமுகாமையாளர்,**
சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
9-4-86.

[A 570]

## பிறந்ததின வாழ்த்து



### செல்வன் ஸ்ரீகாந்த் பாலகிருஷ்ணன்

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த திரு சி.பாலகிருஷ்ணன் அன்பரசி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வர் செல்வன் ஸ்ரீகாந்த் முதலாவது பிறந்த தினத்தை (5-4-86) சனிக்கிழமை, டமாம்-சவூதியில் தமது பெற்றேருடன் குதூகலமாக கொண்டாடினர். இவர் சகல சீரும், சிறப்புகளும் பெற்று நீடூழி வாழ்க எனப் பெற்றேருடன், மட்டக்களப்பில் வசிக்கும் (நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அம்மப்பா, அம்மம்மா, சித்திமார், மாமன்மார், கரவெட்டியைச் சேர்ந்த அப்பம்மா, பெரிய ஐயா, மாமிமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் வாழ்த்துகின்றனர்கள்.

(A 571)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## மருத்துவ பீடத்திற்கு மரத்திலான பரிசோதனைக்கூட தளபாடங்கள் வழங்குதலும் பொருத்துதலும் (2-ம் மாடி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு ரூபா 1,000,000/- பெறுமதியான மரத்திலான பரிசோதனைக் கூடத் தளபாடங்கள் வழங்குவதற்கும், பொருத்துவதற்கும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. அளவுகள், மாதிரி வரைபடங்கள் ஆகியவற்றை பல்கலைக்கழக வேலைப் பொறியியலாளரிடமிருந்து 25-04-1986ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள முடியும்.

விபரங்களுக்கான வேண்டுகோளுடன் ரூபா 200/-க்கு தபாற்கட்டளை/காசுக் கட்டளை அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் விண்ணப்பிப்பதற்கானமுடிவுத் திகதி: 30-4-1986 பிற்பகல் 2-00 மணி ஆகும்.

**பதிவாளர்.**

(A569)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
நடராசாவும் சபாநாதனும். மனுதாரின் சட்டத்தரணிகள்.
இல: தத்துவம்/143

தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும் இல: 10, இராசவல்லி ஒழுங்கை, கொழும்பு-6 இல் வசித்த இளையதம்பி இராசையா கைம்பெண் தேவநாயகி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

-மரணமெய்தியவர்.
சுப்பிரமணியம் நாகலிங்கம் தெல்லிப்பழை தற்போது இல; 10. இராசவல்லி ஒழுங்கை, கொழும்பு-6.

மனுதாரர்.

மேலே குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகித்து தத்துவம் பெறுவதற்காக இம்மன்றில் குறித்த மனுதாரர் விண்ணப்பம் செய்துள்ளார் என்றும் அந்த விண்ணப்பத்திற்கு அமைய பின்முற்ருக்குங் கட்டளை இம்மன்றினல் பதியப்பட்டுள்ளது என்றும் இவ்விடயத்தில் அக்கறையுள்ளவர் எவராக இருப்பினும் இம்மன்றில் 1986-ம் ஆண்டு மே மாதம் 14-ம் திகதி காலை 9 மணிக்கு தோன்றி தகுந்த காரணம் எதுவும் இருப்பின் அவற்றைத் தெரிவிக்காவிட்டால் குறித்தமரண மெய்தியவரின் சொத்துக்களின் நிர்வாகத் தத்துவப்பத்திரம் மனுதாருக்கு வழங்கப்பட்டு கட்டளை பூரணமாக்கப் படுமென்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

1986-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 9-ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்.**
பதிவாளர்
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்.

[C 1688]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. இராசையா பாலசுந்தரம்

(மோட்டர் பாலா)
(சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர், கே. கே. எஸ்.)

தோற்றம்:
24—10—1931

மறைவு:
11—4—1984

திதி:
19—4—1986

அன்பு வழிகாட்டி எங்களை வாழவைத்த தெய்வமே, திடீரென எங்களை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டகலாது. அன்பு தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு
**மனைவி, பிள்ளைகள்.**

டச் றேட்,
வீமன்காமம்,
தெல்லிப்பழை.

(C-1632)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கொக்குவில் மேற்கு காலஞ்சென்ற திரு இ. க. சுப்பையா திருமதி பரிமளகாந்தி சுப்பையா ஆகியோரின் அன்பு மகள்

### அமரர் திருமதி யோகலெட்சுமி நடராஜா

தோற்றம்: 12-05-1938
மறைவு: 13-03-1986

எமது குடும்பத்தின் குல விளக்காய், தலைவியாய், பண்பும் பாசமும் நிறைந்த தலைமகளாய்தோன்றி வாழ்ந்து இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

இங்கிலாந்தில் அன்னரது சுகயீனத்தின்போதும், மரணத்தின்போதும் அவரது தேவைகளையெல்லாம் நிறைவுசெய்த மகள், சகோதரி, மைத்துனர் திரு. தேவராஜன் மற்றும் அவர்களது நண்பர்கள், எமது துயரில் பங்குகொண்டவர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேம்.

அன்னரின் இல்லத்தில் நாளையதினம் 12-4-86) பகல் 11 மணியளவில்வீட்டுக்கிருத்தியம் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அன்னரின் ஆத்மாவின் சாந்திக்கு பிராத்திக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேம்.

குடும்பத்தார்.
''ஞானசத்தினி இல்லம்'',
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[C 1683]

## தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் 1986/87

1. Draughtsman Apprenticeship.
2. Refrigeration and Airconditioning.
3. T. V. and Radio Technician Course.
4. Quantity Surveying [City and Guilds Exam.]
5. Electrical Wiring Course (2 Months.)
6. Short-hand and Typing (English and Tamil).

ஆகிய பயிற்சி நெறிகள் 13-04-86-ல் ஆரம்பமாகின்றன.

தொடர்புகொள்க:
Registrar,
INSTITUTE OF TECHNICAL STUDIES,
பழைய டிஸ்பென்சரி முன்பாக,
வட்டுக்கோட்டை.

(C1681)

## விக்னு டியூசன் சென்ரர்

ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகளுக்கு தனித்துவம்வாய்ந்த ஒரே நிறுவனம்]

**A/L 88 கலை, வர்த்தக, விஞ்ஞானம்**
**ஆரம்பம் 19-4-1986 மாலை 1.00**

கலை, வர்த்தக, தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்குழு:-

| | | | |
|---|---|---|---|
| பொருளியல்: | திரு. கிருஷ்ணனந்தன் | தமிழ்: | திரு குழந்தை |
| வர்த்தகம்: | திரு. லங்கா | புவியியல்: | திரு. குணராஜா |
| கணக்கியல்: | திரு. வன்னியசிங்கம் | இந்துநாகரிகம்: | திரு. சர்மா |
| அளவையியல்: | திரு. சுப்ரமணியம் | அரசியல்: | திரு. மஃறூவ் |

தூய, பிரயோக கணிதம்: திரு. தயாபரன் B.Sc. [ஆரம்பம் மாலை 3.00 மணி]

A/L 87—
Pure Maths — Calculas
Applied Maths — Dynamics

மு.குறிப்பு
★ தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து நடாத்தும் ஒரே ஒரு நிறுவனம்.
★ 88ம் ஆண்டுக்கு பரீட்சைக்கு தோற்றுவிக்கும் மாணவர்கள் 19ம் திகதிக்கு முன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(A430)

“ ‘சுவாப்போ’, ‘பி. எல். ஓ’ போன்று

# தமிழீழ போராட்டத்தை அங்கீகரிக்க முடியாது!”

— பி. ஆர். பஹத்

புதுடில்லி, ஏப். 10

**“தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்கம் ‘சுவாப்போ’ பாலஸ்தீன விடுதலை இயக்கம் பி. எல். ஓ. ஆகியவற்றைப் போன்று இலங்கைத் தமிழ் மக்கள் போராட்ட இயக்கங்களையும் அங்கீகரிக்க முடியாது” என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. ஆர். பஹத் தெரிவித்துள்ளார்.**

திரு. பஹத் நேற்று இந்திய லோக்சபையில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு பஹத் அங்கு பேசியதாவது: “இலங்கைப் பிரச்னையை ஒ அரசியல் பிரச்னையாக இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. ஆயினும் இப்பிரச்னைக்கு ஐக்கிய இலங்கை என்ற அமைப்பின் கீழேயே தீர்வு காண வேண்டுமென இந்தியா விருப்புகிறது.

இலங்கை பிளவுபடுவதை இந்தியா விரும்பவில்லை. இதன்காரணமாக இலங்கை தமிழ்மக்களின் போராட்ட இயககங்களை சுவாப்போ, பி. எல் ஓ போன்று அங்கீகரிக்க முடியாது” என்றார்.

இலங்கை இனப்பிரச்னை வல்லரசுகளின் தலையீட்டையே தூண்டுகிறது என்றும் தெரிவித்த திரு. பஹத், “புதுடில்லியில் நடைபெறவுள்ள அணிசேரா இயக்க வெளிவிவகார அமைச்சர்கள் மகாநாட்டுக்கு வரவுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு. ஹமீத் ஒரு புதிய சமரசத் திட்டத்துடன் புதுடில்லி வரவிருப்பதாகவும் கூறினர்.

அத்திட்டத்தைப் பரிசீலித்த பின்னரே இந்தியா இலங்கை குறித்து மேல்நடவடிக்கையில் ஈடுபடும்” என்றும் அவர் மேலும் தெரிவித்தார், (கி)

கேர்ணல் கடாபி:

# மத்தியகிழக்கின் ஒரு ‘விசர்நாய்’!

— றீகன் கூறுகிறார்

வாஷிங்டன், ஏப் 10,

லிபிய அதிபர் கேர்ணல் முஹமர் கடாபியை மத்திய கிழக்கின் ஒரு ‘விசர்நாய்’ என்று அமெரிக்க அதிபர் றீகன் தெரிவித்துள்ளார்.

கேர்ணல் கடாபியின் மத்தியதரைக் கடல் நடவடிக்கைகள் குறித்துப் பேசியபோதே திரு றீகன் வாஷிங்டனில் நேற்று இப்படிக்கூறினர்

கடாபி சர்வதேசப் பயங்கரவாதத்துக்கு தூண்டுகோலாக இருப்பதாகவும் றீகன் கூறினர். கூடவே மத்தியதரைக் கடலில் அமெரிக்க கடற்படை ஒத்திகை நிறுத்தப் பட்டுள்ள போதிலும், அப் படையின் இரு விமானந்தாங்கிக் கப்பல்கள் நிரந்தரமாகவே அங்கு இருக்கும் என்றார்.

இதேவேளை அண்மையில் இடம்பெற்ற ரி. டபிள்யு. ஏ. விமானக் குண்டு வெடிப்பு, அமெரிக்க சிப்பாய்களின் மேற்குபேர்லின் கேளிக்கை விடுதி குண்டு வெடுப்பு தொடர்பாக புலன்விசாரணைகள் இடம் பெறுவதாகவும் அதிபர் றீகன் தெரிவித்தார். (கி)

பூட்டோ மகள் பெனுஸிர்

## பாகிஸ்தான் திரும்புகிறார்

லண்டன், ஏப். 10

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவியும், முன்னாள் ஜனாதிபதி சுல்பிகார் அலிபூட்டோவின் மகளுமான செல்வி பெனுஸிர் பூட்டோ பிரிட்டனிலிருந்து பாகிஸ்தான் புறப்பட்டுள்ளார்.

இவர் கடந்த சில வருடங்களாக பிரிட்டனில் அஞ்ஞாதவாசமிருந்தது குறிப்படத்தக்கது. கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் இவர் தமது சகோதரனின் ஈமச்சடங்குகளுக்காக பாகிஸ்தான் வந்திருந்தபோது அங்கு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். தொடர்ந்து அக்காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் லண்டன் அனுப்பப்பட்டார்.

## உலகச் செய்திகள்

தற்போது அவர் பாகிஸ்தானில் தமது கட்சிவேலைகளை மேற்கொள்ளும்வகையில் லண்டனிலிருந்து பறப்பட்டுள்ளார்.

லண்டனில் பிரமாண்டமான வழியனுப்பு வைபவம் இடம்பெற்றது. பெனுஸிர் ஆதரவாளர்கள் வீதியோரங்களில் நின்று மகிழ்ச்சி ஆரவாரஞ்செய்து பிரியாவிடை அளித்தனர்.

பாகிஸ்தானில் வரவேற்பு ஏற்பாடுகள் விமரிசையாக உள்ளன லாகூர் விமான நிலையத்தில் மக்கள் திரண்ட வண்ணமுள்ளனர். பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் லாகூர் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வி பெனுஸிர் பூட்டோ லண்டனிலிருந்து புறப்புடு முன்னர் பாக். அதிபர் ஜெனரல் ஹக்கை ஒரு கொலைகாரன் என்று வர்ணித்தார். அத்துடன் பாகிஸ்தானில் தாம் எத்தகைய சவால்களுக்களுக்கும் முகம் கொடுக்கப் போவதாகவும் சூளுரைத்தார். [கி]

## பிரஜைகள் குழு

(மாவிட்டபுரம்)

அளவெட்டி வடக்கில் பிரஜைகள்குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரஜைகள் குழுத் தலைவராக சட்டத்தரணி புண்ணியமூர்த்தியும், செயலாளராக க. சண்முகசுந்தரமும், பொருளாளராக கே. சுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆறுபேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. [இ]

## சைப்பிரஸ் இனப்பிரச்னை புதிய சமரசத் திட்டம்!

லண்டன், ஏப், 10,

மத்திய தரைக்கடல் தீவான சைப்பிரஸ் இனப் பிரச்னைக்குத் தீர்வு காணும் விதத்தில் ஒரு புதிய சமரசத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்தீவில் கிரேக்க சைப்பிரஸ் காரர்களுக்கும், துருக்கி சைப்பிரஸ் காரர்களுக்குமிடையிலேயே பிரச்னை மூண்டுள்ளது துருக்கி சைப்பிரஸ் காரர்கள் இங்கு சிறுபான்மையினர். எனவே தாம் குடியேறியுள்ள சைப்பிரஸ் வட பகுதியை தனி நடாகத் தரும்படி கோரி வருகின்றனர்.

ஆனல் சைப்பிரஸ் கிரேக்கர்கள் இதற்கு அனுமதிக்கவில்லை. இதனையடுத்தே இவ்விரு சமூகத்தவா மத்தியிலும் பிரச்னை எழுந்துள்ளது.

புதிய சமரசத் திட்டம் வடக்கு சைப்பிரஸில் துருக்கியர்களுக்கு சுயநிர்ணய உரிமைகளையும், சுயாட்சி அமைப்பையும் வழங்குகிறது. ஆனல் நாட்டுப் பிரச்னைக்கு இடமளிக்கவில்லை.

இதே வேளை சைப்பிரஸ் ஜனதிபதி ஒரு கிரேக்க இனத்தவராக இருப்பார் உப ஜனதிபதிப் பதவி துருக்கியர் ஒருவருக்கே வழங்கப்படும் என்று அச்சமரசத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கி)

அமெரிக்க

## பாதுகாப்பமைச்சர் விஜயம்: ஹோட்டல் முன் குண்டு!

பாங்கொக், ஏப் 8,

அமெரிக்க பாதுகாப்பமைச்சர் திரு. கெஸ்பர்வெயின் பேக்கரும், தாய்லாந்து பிரதமர் திரு. பிரேம்பின் சுலானந்தாவும் விருந்தொன்றில் கலந்துகொள்ள விருந்த பாங்கொக் ஹோட்டல் முன்பாக வெடிப்பொன்று நிகழ்ந்தது

இக் குண்டுவெடிப்பில் 3 பேர் காயமடைந்தனர். அந்த ஆடம்பர ஹோட்டல் முன்பாக இருந்த குப்பைத்தொட்டியொன்றிலேயே அந்த சக்தி வாய்ந்த குண்டு வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது

இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்த போதிலும் அமெரிக்கபாதுகாப்பமைச்சரினதும், பாங்கொக் பிரதமரினதும் திட்டமிட்ட விருந்துபசாரச் சந்திப்பு வேறொரு ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது.

தாய்லாந்தில் அமெரிக்க ஆயுதங்களை வைத்திருப்பது தொடர்பாகவே இத்தலைவர்கள் இருவரும் பேச்சு நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## “கிராம அபிவிருத்தி சங்கமே கிராம வளர்ச்சியின் கரு”

(பண்டத்தரிப்பு)

“ஒரு கிராமத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சி அப்பகுதியில் இயங்கிவரும் கிராம அபிவிருத்திச் சங்கத்திலேயே பெரிதும் தங்கியுள்ளது ஆகவே அபிவிருத்திச்சங்கங்கள் பெயரளவில் இயங்காது கிராம அபிவிருத்திக்கான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டியது அவசியமானதாகும்.”

இவ்வறு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க சண்முகநாதன் சண்டிலிப்பாய்-கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். பி. ஜெயக்குமார் பேசுகையில், “கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சிறப்பாக இயங்கினல் ஒரு கிராமம் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றமடைய முடியும். எமதுபிரிவில் இயங்கிவரும் பத்துக்குமேற்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களில் நன்கு ஐந்து சங்கங்கள் மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்றன.” என்றார்.

சண்டிலிப்பாய் கிராம சேவை அலுவலர் திரு. எஸ். கந்தசாமி, சண்டிலிப்பாய் பிரஜைகள் குழுத் தலைவர் டாக்டர் ரி. கோபாலசிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

தொடர்ந்து புதுவருட நிர்வாகிகள் தெரிவும்இடம்பெற்ற போது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: மு. பரராசசிங்கம். உப தலைவர்கள்: எஸ், எஸ். தில்லையம்பலம், எப் மாணிக்கம், செயலாளர்: அற்புதரத்தினம் (ஆசிரியர்) தனதிகாரி; செ. நித்தியானந்தம், கணக்குப் பரிசோதகர், எஸ். அப்பாத்துரை. ஏழுபேர்கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

★ பொழுது போக்கு மையங்களில்

# வெள்ளையர்களுக்குச் சமமாக

## கறுப்பினத்தவருக்கு சந்தர்ப்பம்!

### தென்னுபிரிக்காவில் புதிய திட்டம்!!

கேப்ரவுண், ஏப் 8,

தென் ஆபிரிக்காவில் வெள்ளையர்களுக்குச் சமமாக கறுப்பினத்தவர்களும் உறைவிடுதிகள ஹோட்டல்கள் மதுபானச் சாலைகள், நீச்சல் தடாகங்களில் நடமாடவும், அவற்றைப்பாவிக்கவும் அனுமதியளிக்கப் பட்டுள்ளது. இதுவரை காலமும் வெள்ளையர்களுடன் மேற்குறிப்பிட்ட இடங்களில் கறுடபர்கள் சமமாக இருப்பது சட்டபூர்வமாகத் தடுக்கபட்டிருந்தது

தென்னுபிரிக்க அரசின் புதிய சட்டவிதிகளுக்கமையவே இச்சமத்துவத்துக்கு இடமளிக்சப்பட்டுள்ளது. தீவிரவாத வெள்ளை இனத்தவர்கள் சிலர் இத்தகைய அனுமதிக்கு எதிர்ப்புத்தெரிவித்துள்ளனர். ஆயினும் ஹோட்டல்கள் உறைவிடுதிகள், மதுபானச் சாலைகளை நிர்வகிக்கும் வெள்ளை இனத்தவர்கள் இப்புதிய சமத்துவ சட்டத்துக்கு வரவேற்பளித்துள்ளனர்.

இத்தகைய புதிய அனுமதி கறுப்பினத்தவர்களை வெள்ளையர்கள் போன்றே சகல விதத்திலும் சுதந்திரமாக அப்பொழுது போக்குமையங்களை அனுவிக்கச் சந்தர்ப்பமளித்துள்ளது.

இத்தகைய அனுமதியின் மூலம் தென் ஆபிரிக்காவின் உல்லாசப் பயணத்துறை எதிர்காலத்தில் நன்கு வளர்ச்சியடையும் என்றும், பெருந்தொகையான வெளிநாட்டவர்கள் தென்னுபிரிக்கா வருவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (கி)

### மணி வாக்கு

மனிதன் மட்டும் ஞான ஒளிபெறச்
சம்மதிப்பானாயின் யாவும் மாறுதலடையும்.

— ஸ்ரீ அரவிந்தர்

# நமது நோக்கு

## இனி என்ன நடக்கும்?

இன்னும் இருதினங்களில் தமிழ்ப் புத்தாண்டு பிறந்துவிடும்.

கொலைகள், கொள்ளைகள் மலிந்து நாடு சின்னாபின்னத்துக்குள்ளாகி, எதிர்கால நம்பிக்கையே சிதறிப்போன நிலையில் மக்கள் திக்குமுக்காடி நிற்கிறார்கள்!

இனி என்ன நடக்கும்? என்று எவரிடமாவது கேட்போமானால், "இனியும் என்ன நடக்கவேண்டும்?" என அவர்கள் திருப்பிக் கேட்கிறார்கள். அந்த அளவுக்கு இந்தநாட்டில் அநியாயம் அதிகரித்துப்போய் விட்டது.

கடந்த தேர்தலின்போது தென்னிலங்கையில் சிங்கள மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசினை பதவியில் அமர்த்தினார்கள் என்பது உண்மைதான் அதேசமயம் எதிர்க்கட்சிகளை முற்றாக அவர்கள் புறக்கணித்துவிடவில்லை. அதேபோல் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சுயாட்சியை முன்வைத்த தமிழர் விடுதலை முன்னணிக்கே பெரும்பான்மை கிடைத்தது. அதனால் அவர்கள் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமையை ஏற்கமுடிந்தது.

1983-ம் ஆண்டு இனக் கலவரத்தையடுத்து எழுந்த அரசியல் சூழ்நிலைகளால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனிநாட்டுக் கோரிக்கையைப் பலமாக வற்புறுத்த நேர்ந்ததையடுத்து அரசியல் சட்டம் திருத்தப்பட்டு அவர்கள் பதவியிழந்தனர்.

பாராளுமன்றத்துக்குச் செல்வதற்கான தமிழ் மக்களின் உரிமையை அரசு தனது பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு இவ்வாறு பறித்தபொழுது ஜனநாயகத்தின் பேரால் மக்கள் கருத்துக் கணிப்போ பொதுத் தேர்தலோ நடத்த வேண்டும் என்ற அளவுக்கு சிந்திக்கவில்லை. ஆனால் அந்தத்திருத்தச்சட்டம் நிறைவேறிய கையோடு தமிழ்ப்பிரதேசங்களில் கடுமையான ராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டது பிரிவினை கோரும் தமிழ்த் தீவிரவாதிகளை ஒடுக்குவதாக கூறிக் கொண்டு தமிழ்ப் பிரதேசம் போர்க்களமாக்கப்பட்டது. இப் போர்க்களத்தில்கொன்றொழிக்கப் பட்டவர்கள் பெரும்பான்மையும் அப்பாவித் தமிழ்மக்களே!

இவ்வாறு தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை சிங்கள மக்களும், இதரக்கட்சியினரும் ஒட்டுமொத்தமாக ஆதரிக்கின்றார்கள் என்று மற்றவர்களை அரசு நம்பச் செய்கிறது. அரசு இதுவரை இங்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை தென்னிலங்கையில் சாதாரண மக்களும்அவர்களின்கட்சிகளும் எந்த அளவுக்கு அங்கீகரித்துள்ளார்கள் என்பதை ஒரு கருத்துக் கணிப்பின் மூலமே அறியலாம்

தமிழ்ப் பிரதேசங்களில் என்ன நடக்கிறது என்பது பற்றித்தமக்கே தெரியவில்லை, என ஜனபதி திரு. ஜே ஆர் ஜெயவர்தன அண்மையில் கூறியிருக்கிறார்.

இந்தப் பிரதேசங்களில் வாழ்பவர்களும் மக்கள் தாம், அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் தாம் எனக்கருதுவதாயின் அரசு இவர்கள் மத்தியில் தற்பொழுது செயற்பட்டு வரும் பிரஜைகள் குழுக்கள் சமாதான சபைகள் போன்றவற்றின் கருத்துக்களையாகுதல் கேட்டு ஆயுதப்படைகளின் அடாவடித்தனங்களைக் குறைக்க முடியும். அதற்கும் மனம்வேண்டும்.

அண்மையில் நடத்தப்பட்ட விமானத்தாக்குதல்களுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் குரல் குரல் எழுந்த பின்னரே அரசு அதனைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு முன் வந்தது.

முடிவுறும் ஆண்டின் இறுதிக் காலத்தில் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதிராக எடுத்த மிக மோசமான ஒரு நடவடிக்கையாகவே இந்த விமானத் தாக்குதல் கருதப்படும் ஹெலிகொப்டரிலிருந்து சுடுவது, குண்டு வீசுவது. திராவகம் வீசுவது போன்றவையும் இதில் அடங்கும்.

இந்த வான வேடிக்கைகளால் கடக்கும் ஆண்டின் இறுதியில் காட்சியளிக்கத் தொடங்கிய ஹெலியின் வால்நட்சத்திரம் பற்றி நம்மில் அநேகர் அலட்டிக்கொள்ளவில்லை. இந்த நட்சத்திரம் 75 வருடங்களுக்கொருமுறை தோற்றும் சுற்றுக்காலத்தைக் கணிப்பிட்ட இந்திய விஞ்ஞானிகள் (சாஸ்திரிகளும்தான்) உலகில் தீமை ஒழிந்து நன்மை நிலை பெறும் காலங்களிலேயே இது தோற்றமளிப்பதாகக் கருதுகிறார்கள். கௌரவர்க்கும் - பாண்டவர்க்குமிடையில்நடைபெற்றமகாபாரத யுத்த காலத்திலும் இந்நட்சத்திரம் தோன்றியுள்ளதாகக் கருதப்படுகின்றது.

அன்று பாண்டவர்க்கு நீதிகிடைத்தது. ஆனால்அழிவுகள் கொஞ்சமல்ல.

வருடத்தின் மிகப்பிந்திய செய்தி என்னவென்றால், இலங்கை வெளிநாட்டமைச்சர் ஐனுப் சாகுல் ஹமீது இனப்பிரச்னை தொடர்பாகப் புதிய ஒரு திட்டத்தை புதுடில்லிக்கு எடுத்துச் செல்லவிருக்கிறார் என்பதாகும். அடுத்து வரும் வெளிநாட்டமைச்சர்கள் மகாநாட்டின்போது இந்திய அதிகாரிகளுடன் இந்தப் புதிய திட்டம் பரிசீலிக்கப்படுமாம்.

ஏற்கனவே நடந்துள்ளவற்றைப் வைத்துப் பார்க்கும்போது இதுவும் ஒரு காலக்கடத்தலாகவே இருக்கும் என்பதில் சந்தேசமில்லை.

இருந்தாலும் தமிழ்மக்கள் மீண்டும் அமைதியாகவும், தன்மானத்தோடும் வாழக்கூடிய ஒருசூழ்நிலையை உருவாக்க இத்திட்டத்தின் மூலமாகுதல் ஒரு வழி பிறக்குமானால் நல்லதுதான்.

நம்பலாமா........

---

### அமரர் பெரியதம்பி:
# அந்த FREE BIRD ஓர் அமைதியான கனவான்!

ஈழநாடு ஆசிரியர் பகுதி ஊழியர் திரு. பெரியதம்பி அவர்களின் சடுதியான மறைவு, இந்த நிறுவனத்தின் சகல தரப்பு ஊழியர்களையும் கண்கலங்க வைத்துள்ளது.

வடபகுதியில் ஒரு தினசரியாக 'ஈழநாடு' என்று வெளிவரத் தொடங்கியதோ அன்று முதல் இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு தமது உடல்-உள ரீதியான உழைப்பை அமரர் பெரியதம்பி தமது இறுதி மூச்சுவரை வழங்கிவந்தார்,

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல அறிவு பெற்றிருந்தார்.

'வாசிப்பதில் ஒருவன் பூரணமடைகிறான்' என்பது ஒரு முதுமொழி. இதற்கமைய பெரியதம்பி அவர்கள் தமது ஒய்வு நேரத்தை நல்ல ஆங்கில நாவல்களையும் சிறுகதைப்புத்தகங்களையும் வாசிப்பதில் செலவிடுவார்.

இப்பழக்கத்தின் காரணமாக பல தடவைகள் இரவில் நீண்டநேரம் புத்தகங்களை வாசிப்பதில் ஈடுபட்டு பின்னர் தாம் வாசிக்கும் புத்தகத்தின் இறுதியாக விட்ட பக்கத்தை தமது மார்புடன் அணைத்தபடி பெரியதம்பி உறங்கிவிடுவார் இப்படியாக அவர் உறங்குவதை இரவுக்கடமையில் ஈடுபடும் பத்திரிகையாசிரியர்கள் அடிக்கடி காண்பதுண்டு.

ஈழநாட்டின் எந்தப் பிரிவாகமிருக்கலாம். ஒவ்வொரு பிரிவின் ஊழியர்களுடனும் அமைதியாக அதேவேளை மிக அடக்கமாக பெரியதம்பி நடந்து கொள்வார்.

பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் பேணும் பொறுப்பை அவர் மேற்கொண்டு வந்தார். உதவி ஆசிரியர்கள் அவர் பொறுப்பிலுள்ளவற்றைக் கொண்டு சென்றால் மீண்டும் அவற்றைக் பெறும் வரை பெரியதம்பி ஓயமாட்டார். பின்னும், முன்னும் திரிந்து அவர்களிடமிருந்து மீண்டும் அவற்றைப் பெற்று விடுவார் ஒரு பத்திரிகையைக் கொண்டு சென்றால் அதன் ஒவ்வொரு பக்கமும் சேதமில்லாமல் திரும்பி வந்துள்ளதா? என்பதில் அவர் மிக அவதானமாகவே இருந்து கொள்வார். இது அவரது கச்சிதமான கடமை உணர்வை வெளிப்படுத்துவதாக இருந்தது.



ஆசிரியர் பகுதியில் அமரர் பெரியதம்பி கடமையாற்றிய போதிலும் ஈழநாட்டின் தினசரி விநியோகத்திலும் அவர் கண்ணுங்கருத்துமாக இருந்தார்.

அதிகாலையில் எழுந்து விடுவார்; இயந்திரப் பகுதியிலிருந்து வெளிவரும் தினசரிகளை மடித்துப் பக்குவஞ் செய்து ஏனைய விநியோகப் பகுதி ஊழியர்களுடன் தாமும் ஒருவராக தமக்குரிய பத்திரிகைகளைக் எடுத்துக் கொண்டு பெரிய பெட்டியுடன் கூடிய தமது சைக்கிளில் அவர் புறப்பட்டு விடுவார்.

''பெரியதம்பி இந்த வேலை உங்களுக்குக் கடினமாக இல்லையா'' என்று ஒரு தடவை நான் கேட்டபோது, ''No I am a freebird'' என்று அவர் பதிலளித்தது இன்றும் காதில் ஒலிக்கிறது

கடந்த மாதம் 7 ந் திகதி மாலை நேரம் 'ஈழநாடு' காரியாலயம் வந்தேன் பெரியதம்பியின் சடுதியான மறைவு அறிவிக்கப்பட்டது இறுதியாக நான் அவரைக் கண்ட அவர் படுத்துறங்கும் ஒய்வு அறைக் கட்டில் பக்கம் சென்றேன்.

அங்கே அவரது கட்டிலின் கால் புறத்தில் அவர் சேகரித்து வைக்கும் பத்திரிகைகள் சில கிடந்தன. அவற்றின் மத்தியில் இரு ஆங்கில நூல்கள் தலை நீட்டின எடுத்துப் பார்த்தேன்.

Lady Chatterly's Lover என்ற பிரபல நாவலும் Penguin பதிப்பில் வெளியான '19/5 World Almanac' என்ற நூலுமே அவையாகும். இவை இரண்டும் ஓர் அமைதியான 'கனவான்' (Gentleman) தம்மை விட்டுப் பிரிந்ததைக் கூறாமல் கூறிநின்றன.

பா. அனந்தகிருஷ்ணன்,

---

## கடமையே கண்ணானர்

எவர்க்கும் நல்லன் எவர்க்கும் இனியன்
இன்சொல் அன்றி வன்சொல் தேரான்
ஐம்புலன் வென்ற அறநெறியாளன்
பெரியதம்பி எனும் பண்பாளன்
'ஈழநாடு' எனும் எம்குடும்பத்தில்
அங்கத்தவனாய் ஆண்டுகள் பலவும்
தொண்டுகள் புரிந்த தூய உள்ளத்தன்
தன்னலம் என்ற சிந்தனை இன்றித்
தாபன நலனே மேவிய நல்லோன்
மழையெனப் பாரான் காற்றெனப் பாரான்
வெயிலெனப் பாரான் கடமையே பார்ப்பான்
எமைப் பிரிந்தின்றோர் திங்களாயினதே
எமைநீ பிரிந்தே ஏகினும் நின்றன்
நினைவுகள் நெஞ்சை நீங்கலும் ஆமோ
எளிமை மிகுந்த நின்னதாம் தோற்றம்
இனிமை மிகுந்த நின்னதாம் புன்னகை
ஆங்கில நாவலும் கையும் ஆக
அமைதியாய் ஓர் பால் இருந்திடும் காட்சி
நீங்குமோ நெஞ்சால் சொல்வாய் தம்பீ.

- ம. பார்வதிநாதசிவம்.

---




## எண்ணம் முடித்த வாகீசர்

திருவாவடுதுறை என்னும் தலத்தில் சிவதரிசனம் செய்து கொண்டு தன் தல யாத்திரையினைத் தொடர்ந்தார் திருநாவுக்கரசர். பழையாறை என்னும் தலத்தை அடைந்த திருநாவுக்கரசர் தூரத்திலே ஒரு ஆலயத்தைக் கண்டு தொழுதார். அப்படித் தொழுவதைக் கண்ட சிலர் அப்பர் சுவாமிகளை நோக்கி சமணர்களின் இடத்தையே சிவாலயம் என்று கருதி வணங்கிவிட்டீர்கள். ஆனால் சமணர்கள் தங்கள் செல்வாக்கினால் அங்கிருந்த சிவாலயம் ஒன்றையே தங்கள் இடத்துள் மறைத்து வைத்திருக்கின்றார்கள் என்று கூறினர். அதுகேட்ட அப்பர் சுவாமிகள் சிவாலயம் மறைக்கப்பட்ட இடத்துக்குச் சமீபமாகச் சென்று சமணர்கள் வஞ்சனையால் மறைந்த வஞ்சம் ஒழித்தருளி நான் உம்மைக் கண்டு வணங்கும் வாய்ப்பினை எனக்குத் தந்தருளும்' என்று வேண்டியவாறு ஓரிடத்தில் இருந்தார்.

தன்னுடைய நோக்கம் சிவனருளால் நிறைவேற வேண்டும் என்ற உறுதியுடன் உணவும் உட்கொள்ளாது சிவபெருமானையன்றி வேறெதனையும் சிந்திக்காது இருந்தார் அப்பர்சுவாமிகள். சிவபெருமானும் அந்நாட்டு மன்னன் கனவில் தோன்றி 'அறிவில் சமணர் நமை மறைப்ப இருந்தோம். நம்மை அரசு கும்பிடும்வண்ணம் உறுதியுடன் இருப்பதால் சமணரை விலக்கிவிடுவாயாக' என்றருளினார். இந்தச் செய்தியினைச் சேக்கிழார் கூறும்போது 'எண்ணம் முடிக்கும் வாகீசர் இருந்தார் அமுது செய்யாதே' என்று கூறியுள்ளார். சிந்தனைத் தெளிவும், தெளிந்து கொண்ட முடிவில் உறுதியாகச் செயற்படுத்தலும் உடையவர் தம் எண்ணம் நிறைவேறப் பெறுவர் என்ற வள்ளுவரின் சித்தாந்தப்படி சைவத் தமிழ் மக்களாகிய நாமும் நடந்து கொள்வோமானால் இன்றைய கெடுபிடிகளுக்கிடமானசெல்வச்சந்நதி முருகன் ஆலயம் வழமையான சிறப்பினை வசதிகளையும் பெறும்.

ஆறுபடை வீடுகளுக்கு நிகரான தெய்வீகப் பொலிவு மட்டுமன்றிப் பசிப்பிணி மருத்துவ நிலையங்கள் என்று போற்றத்தக்க பல அன்னதான மடங்களுடன் விளங்கும் சந்நிதிமுருகன் ஆலயத்தில் நிகழ்ந்துள்ள அசம்பாவிதங்கள் உண்மைச் சைவசமயி ஒவ்வொருவரதும் உள்ளத்திலும் கண்களிலும் இரத்தக்கசிவை ஏற்படுத்தும் கொடுமைமிக்கனவாகும். இப்படியான கொடுமையைக் கண்டும் காணாதவர்கள் போலில்லாமல் அப்பர்சுவாமிகளின் வழியைப் பின்பற்றினால் தெய்வீகத்துணை உடனடியாக நமக்குக் கிடைக்கும்.

எண்ணியர் திண்ணியராகும் தன்மை நமக்கு இல்லையென்றால் இறையருள் மட்டுமன்றி உலகியற்ச் சிறப்பும் நமக்கு இல்லாமற்போகும்!

எண்ணிய எண்ணியாங்கு
எய்துவ எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின்.
— வள்ளுவர்

அருளாளன்

# இத்தடைமுகாம் இடம்மாறும்?

(வவனியா)

வவனியா கச்சேரிக்கு முன் உள்ள தடைமுகாம் இடம் மாறலாம் எனத் தெரியவருகிறது.

24 மணிநேர சோதனை இடம் பெறும் இத்தடைமுகாமுக்கு அருகில் ஆஸ்பத்திரி இருப்பதனால் இத்தடைமுகாம் மன்னார் வீதியிலுள்ள சிங்கள மகாவித்தியாலயத்திற்கு எந்தநேரமும் மாறலாம் எனப்பேசிக் கொள்ளப்படுகிறது.

## பண்டிதமணி அவர்களின் சபிண்டிக் கிரியைகள்

அன்புடையீர்!

குறித்த கிரியைகள் நாளை (12-04-86) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்பர்களை அழைக்கின்றோம்.

சி சதாசிவம் குடும்பத்தினர்
'பண்டிதமணி இல்லம்'
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
11-4-86

(A 573)

## கடைசிநேர வரிவிளம்பரம்

### CLASSESS

Cake making Icing, Decoration, Sugar flowers, Suger modelling, General cookery-Indian cookery. Six months course commencing shortly. Spoken English classes for girls. Mrs T. Mather. Lawton Road, Manipay, (Near Hindu College). C1711)

### தவறிவிட்டது

இளையதம்பி, சின்னத்தம்பி என்பவருடைய தேசிய அடையாள அட்டை 9-4-86 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். சமரபாகு, வல்வெட்டி, வல்வெட்டித்துறை. (C1705]

**எம்பயர் திரையில்**
10-30 2-30, 6-30, 9-15
ஜெய்சங்கர்—சுஜாதா
**மீண்டும் பல்லவி**

**LIDO Jaffna**
10-30, 2-30, 6-30
நாகேஷ்-மனோரமா-சோ
V. K. ராமசாமி
நடித்த
**ஆலயம்**

5வது வாரம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)

# ரெஸோவின் புத்தாண்டு வாழ்த்துமடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துமடல் ஒன்றினை தமிழீழ மாணவர் பேரவை வெளியிட்டுள்ளது

குண்டுவீச்சில் வீடுகள் எரிவதையும் புகையும் தீயும் எல்லா இடங்களையும் வியாபிக்கும் பின்னணியில் விடுதலைப்போராளி ஒருவர் நிர்க்கதியாய் நிற்கும் பச்சிளம் பாலகனின் கைகளைப்பற்றி விடுதலைவேட்கையுடன் உறுதி கூறும் உணர்ச்சியைத் தூண்டும் காட்சி பல வர்ணத்தில் தீட்டப்பட்டுள்ளது.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



அமரத்துவமெய்திய
திருவாட்டி
**வள்ளியம்மை**
**குமாரசாமி**
அவர்கள்

தோற்றம்: 28-07-1921
மறைவு: 13-03 1986

எங்கள் குடும்பத்தலைவியாகவும், வளத்தக்க வாழ்க்கைத் துணைநலமாகவும், அன்புத்தாயாகவும், அருமைமாமியாகவும், ஆருயிர்ப் பாட்டியாகவும், ஆற்றல்மிகு சகோதரியாகவும், உற்றார் நலம்பேணும் உத்தமியாகவும், பாசத்தின் பிறப்பிடமாகவும், எல்லோர் இதயத்திலும் இடம்பிடித்து வாழ்வாங்கு வாழ்ந்து இறைபத மெய்திய எமது பேரன்புப் பெருமாட்டியின் ஈமக்கிரியையில் பங்கு பற்றியும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும் உற்றவிடத்து உதவியும், எமது துக்கத்தில் பங்கு கொண்டு புரிந்துணர்வோடு பரிந்துணர்வு காட்டிய அனைவருக்கும் எமது இருகரம் கூப்பி மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

12-04-86 சனி கிழமை காலை நயினாதீவுத்தீர்த்தக் கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், நண்பகல் இல்லத்தில் நடைபெறும் சபீண்டீகரண நிகழ்ச்சியிலும், கலந்து கொணடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
துணைவர், மக்கள்,
மருமக்கள்,
சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

''திருவேரகம்''
நயினாதீவு-3 (C 1712)

# துப்பாக்கிகளுடன் 2 சிங்கள இளைஞர் திருமலையில் கைது

(கொழும்பு)

இரண்டு துப்பாக்கிகளுடனும் பல தோட்டாக்களுடனும் இ போ ச பஸ் வண்டியில் பிரயாணம் செய்த இரு சிங்கள இளைஞர்களைப் பாதுகாப்புப்படையினர் திருகோணமலையில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்தனர். (பி)

## 31-ம் நாள் நினைவு அஞ்சலி



**நடராசா**
**சோதிநாதன்**

மலர்வு: 05-04-1956
உதிர்வு: 14-03-1986

அகாலமாக மரணமான உனது ஆத்ம சாந்திக்காக இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
தாய், சகோதரங்கள்,
பிள்ளைகள்.

41/4 மானிப்பாய் வீதி,
கோணாந்தோட்டம்,
யாழ்நகர். (C 1713)

## முதல் வருட நினைவஞ்சலி



**திரு. சின்னத்தம்பி**
**கணபதிப்பிள்ளை**

தோற்றம்: 15- 3- 1925
மறைவு: 23- 3- 1985

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எமமை எல்லாம் நல்வழிகாட்டி, அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை வழ வைத்த தெய்வமே! மின்னைமல் மூழங்காமல் ஆருத்துயரில் எம்மை ஆழ்த்திச் சிவபதமடைந்தீரே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேத்தி
மற்றும் உற்றார்,
உறவினர்கள்.

''சிவலிங்கவாசா'',
சுருவில்,
ஊர்காவற்றுறை.
[C 1707]

# வங்கிமுன் மறியல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தினல் முன்வைக்கப்பட்டுள்ள 'வாரம் ஒரு கிளை விநியோகம்' என்ற புதிய திட்டத்தை எதிர் வரும் வாரம் முதல் நடைமுறைப்படுத்த வேண்டியதற்கான ஏற்பாடுகளைத் துரிதப்படுத்தவேண்டியதை முன்னிட்டு வங்கிமுன்பான மறியல் போராட்டம் ஒருவார காலத்திற்குத்தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபருடனும், வங்கிப் பிராந்திய முகாமையாளருடனும்பேச்சுவார்த்தை நடாத்தி அவர்களின் உறுதி மொழியின் அடிப்படையிலேயேஇப்போராட்டம்இன்று முதல் ஒருவாரத் திற்குக் கைவிடப்பட்டுள்ளது. எனவே குறிப்பிட்டபடி விநியோகத் திற்கான நகைகள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படாத பட்சத்தில் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் மறியல் போராட்டம் மீண்டும் சகல வங்கி முன்பாகவும் நடைபெறும்.

''இத்திட்டம் நாட்டு நிலைமைகளைக் காரணம் காட்டி தடைப்படாதவகையில் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், அதற்காக வங்கியின் பிராந்திய நிர்வாகத்தினர் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்பதைம் சங்கம் வங்கி நிர்வாகத்திடம் வேண்டிக் கொள்கிறது. இத்திட்டத்தின் பிரகாரம் பணம் செலுத்திய மொத்த நகைகளும் மீளளிப்புச் செய்யும்வரைக்கும் புதிதாக எவரும் மீட்புக்காகப் பணம் செலுத்த வேண்டாம் என்று சங்கம் வாடிக்கையாளரைக் கேட்டுக் கொள்கின்றது'' [மா]

## பலாலியில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யானவர் அமினர்ஸ் செபஸ்ரியன் [45வயது] என்பவராவர். [பாம்பன்] என்றும் அழைக்கப்படும் இவர்ஒரு மனநோயாளியுமாவர். இவரது தலைப்பகுதியைத் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்திருந்தன.

அடுத்து படுகாயமடைந்தவர் சிங்கராசா முத்துமாலை என்ற 25 வயதுப்பெண். இவர் பலாலி பிரதான வீதியில் அமைந்துள்ள கடையொன்றின் உரிமையாளராவார். பீதியினல் கடையைவிட்டு ஓடும்போதே இவருக்குக் காயமேற்பட்டது. தற்போது இவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பெற்றுவருகிறார்.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதி மக்கள் பீதியினல் பொருள்களுடன் தங்கள் வீடுளைவிட்டு வெளியேறிவிட்டனர். இதேவேளை இப்பகுதியில் ஹெலிகொப்டர் சூடும் இடம்பெற்றது.

இவ்விடயம் தொடர்பாக பிரஜைகள்குழு அரசாங்க அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளது. [பி]

## மகாஜன ப. மாணவர் ஆண்டு விழா

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஆண்டுவிழா நாளை சனிக்கிழமை கல்லூரி வளாகத்தில் திரு. க. நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

## இன்றும்...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்டு காலை 10-15க்கு வவனியாவை வந்துசேரும் வவனியாவிலிருந்து நண்பகல் 12-50க்கு கொழும்பு புறப்படும்.

2வது ரயில்சேவை: காலை 7-10க்கு மருதானையிலிருந்து புறப்பட்டு, நண்பகல் 12-05க்கு வவனியா வந்துசேரும். பி. ப. 2-40க்கு வவனியாவிலிருந்து புறப்படும்

அதே சமயம் ரயில் பிரயாகளின் நன்மை கருதி வ. பி போ. வ சபை இணைப்பு பஸ் சேவைகளை ஒழுங்கு செய்துள்ளது

இன்றுகாலை யாழ். பஸ் நிலையத்திலிருந்து காலை 6மணிக்கு 2 பஸ்களும், காலை 7-15க்கு ஒரு பஸ்ஸும் வவனியா நோக்கிப்புறப்படும்.

மேலும் இன்று யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு மேலதிகமாக இருபஸ்கள் சேவைக்கு விடப்படவுள்ளன இன்று காலை 6-45க்கும், 7-15க்கும் புறம்படும் இந்த இருபஸ்களும் மட்டக்களப்பை அடைந்து 12ம் திகதி அங்கிருந்து புறப்படும்

நாளை 12ம் திகதி அதிகாலை 5-30க்கு 2 பஸ்களும், காலை 6-30க்கு இருபஸ்களும் யாழ். பஸ் நிலையத்திலிருந்து வவனியா நோக்கிப் புறப்படும்.

ரயில் பிரயாணிகளின் தொகை அதிகரிக்கும் பட்சத்தில் பஸ்சேவை அதிகரிக்கப்படுமாம்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபைத்தலைவர் திரு. எஸ். சனகரத்தினம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பேரில்இந்த பஸ்சேவைஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (மா)

## அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

தமிழீழமாணவர் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர் கேதீஸ்வரன் (கேதீஸ்) தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் கிருபாகரன் (கிருபா) ஆகியோ 1984 சித்திரை 11ம் திகதி ஆரியகுளம் சந்தியில் அரசபடையினரால் சுட்டெரிக்கப்பட்ட இரண்டாம் ஆண்டின் நினைவாக சுவரொட்டி மூலம் அஞ்சலி செலுத்தியிருப்பதுடன் அவர்கள் நினைவாக ஒலிபரப்பு நாடா ஒன்றினையும்மேற்படி பேரவை வெளியிட்டுள்ளது.

## உப்புவெளி..,

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தினர் இ. போ. ச. பஸ் உட்பட சில வாகனங்கள் சகிதம் நடந்துசென்று ரோந்துசுற்றுவதில் ஈடுபட்டிருந்தனர் அச்சமயத்தில் போராளிகளால் வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்தது. இராணுவத்தினர் சென்ற வாகனங்களில் ஒன்று கண்ணிவெடியில் சிக்கியதால் வாகனம் பலத்த சேதத்துக்குள்ளானது. இச்சம்பவத்தில் பலியானவர்களும் படுகாயமடைந்தவர்களும் ஹெலிகொப்டர் மூலம் உடனடியாக திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் துப்பாக்கிச்சூட்டுச் சத்தமும் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## திருநெல்வேலியில் புதிய வீதி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சிவன்கோவிலுக்கு யாழ் மாநகரசபை புதிய வீதியொன்றை அமைத்துள்ளது. இதுசம்பந்தமாக முயற்சிகள் மேற்கொண்ட யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சிவஞானத்துக்கும், மாநகரசபை முன்னாள் முதல்வர் திரு. சி. நாகராசாவுக்கும், வர்த்தகர் திரு. அழகரத்தினத்திற்கும் தேவஸ்தான சபை நன்றி தெரிவித்துள்ளது.

இவ்ஆலயத்தில் கொடியேற்றம் இம்மாதம் 20ம் திகதியும் புதிய சிற்பத்தேரின் வெள்ளோட்டம் அடுத்த மாதம் 5ம் திகதியும் நடைபெறவுள்ளன.

# இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி- 29 [1986-4-11]
கிழமை- வெள்ளி
திதி- துதியை பி. ப. வரை
நக்ஷத்திரம்- பரணி
பி. இ. வரை

மேடம்- குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள். சிறுவிடயத்திற்குக்கூட மற்றவர்கள் குறை கூறுவார்கள். வாதரோகத்திற்கு இடமளியாது சுகாதாரத்தைப் பேணவும்.

இடபம்- சமயோசிதமான நடவடிக்கைகள்மூலம் எதையும் சமாளித்துக் கொள்வீர்கள். இல்லறத்தில் அமைதி நிலவும். பூமியால் லாபமுண் .

மிதுனம்- நினைத்தது நடக்காது. நிதியில் முடக்கமுண்டு. பூமிப்பிணக்கும் தலைகாட்டக் கூடும். அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும்.

கடகம்- எதிர்பாராத பிரயாணம் ஒன்று இன்று ஏற்படலாம். முன்னாள் ஆசிரியர் ஒருவரின் அறிமுகம் உங்களுக்கு வசதிகளைத் தேடித்தரும்.

சிங்கம்- அறவழியில் நாட்டம் பிறக்கும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடும் புத்திரவழிச்சிறப்பும் கற்றவர்களின் ஆதரவுமுண்டு,

கன்னி- நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படும். கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். சமயோசிதபுத்தியுடன் நடந்து கொள்ளவும்

துலாம்- களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். புத்திரவழியால் மகிழ்ச்சியும் உண்டு

விருச்சிகம்- பொருள்துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும் புதிய முதலீடுகளை தவிர்க்கவும். தொழில்புரியுமிடத்தில் போட்டி மனப்பான்மையைத் தவிர்க்கவும்.

தனுசு- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள். ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும் சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம்.

மகரம்- புதுமையான சம்பவங்கள் நடைபெறும். சிலருக்கு அதிஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு. விருந்தினர்கள் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்,

கும்பம்- கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள். பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்

மீனம்- பொருள்துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும். பிரயாணத்தின்போது பொருள் நழுவககூடும் சில ருக்கு உடல்நலம் பாதிக்கப் படலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

# தேசிய இளைஞர் சேவை மன்றம்: "கலை கலாசாரத்தைப் பேணி பாதுகாத்து வருகிறது"

(கே வி கே. திருலோகமூர்த்தி)

''கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இம் மாவட்ட இளைஞர் யுவதிகளின் முன்னேற்றம் கருதி பலவித சேவைத் திட்டங்களை நடைமுறைப் படுத்திவருகிறது. தமிழ் மக்களது கலை, கலாசார பாரம்பரியங்களை பேணிப் பாதுகாத்து அதற்கு புத்தூக்கம் கொடுத்து வேண்டிய ஆதரவுகளை நல்கி வருகிறது''

இவ்வாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் அண்மையில் நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட அதிகாரி தர்மசீலன் கூறினர்.

பரந்தனில் உள்ள இளைஞர் சேவைகள் மன்றப்பணிமனையில் நடைபெற்ற இப் பத்திரிகையாளர் மாநாட்டில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு இளைஞர் சேவை அதிகாரி கே. பரராசசேகரம், பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு இளைஞர் சேவை அதிகாரி செல்வி விமலேஸ்வரி வல்லிபுரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்

தொடர்ந்து பேசிய திரு. தர்மசீலன் தமதுரையில் கூறியதாவது:

''கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவை நிர்வாகம் தனித்து இயங்க ஆரம்பித்த இருவருட காலத்தில் பல முன்னேற்ற கரமான நடவடிக்கைகளை மேற் கொள்ள முடிந்தது பளையில் ஆறு இளைஞர் கழகங்களும், கிளிநொச்சியில் பன்னிரெண்டு இளைஞர் கழகங்களும் பூநகரியில் எட்டு இளைஞர் கழகங்களும் தற்போது இயங்கி வருகின்றன.

''திருநகரில் இளைஞர் நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. ஜெயந்தி நகரில் இளைஞர் கேந்திர நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நடமாடும் புத்தக நிலையம் ஒன்றை ஆரம்பித்தோம். அது மட்டுமல்லாமல் பெண்களுக்கான பயிற்சி நிலையம் ஒன்றை கிளிநொச்சி பூநகரிப்பகுதிகளில் நடத்தி வருகிறோம்.

''கனடா - இலங்கை இளைஞர் பரிமாற்றுத் திட்டத்தின் கீழ் இவ் வாண்டு முதல் தடவையாக எமது பகுதியில் இருந்து இராமநாதபுரத்தை சேர்ந்த இளைஞரான விநாயகமூர்த்தி கனடா செல்கிறார். இவ் ஆண்டு பளை மகா வித்தியாலய விளையாட்டுத்திடல் விஸ்தரிப்பு, பளை விளையாட்டுத்திடல் அபிவிருத்தி, பரந்தன் இந்து மகா வித்தியாலய விளையாட்டரங்கு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள உள்ளோம்.

''திருநகரில் சுமார் 50 இளைஞர் யுவதிகளுக்கு வாரத்தில் இரு நாட்கள் ஆங்கில இலவச போதனை வகுப்புக்களை நடத்தி வருகிறோம்

''மாணவர் கல்விக்கும் நாம் கொத்தணிப்பாடசாலைகள் மூலமாக ஊக்கம் கொடுத்து வருகிறோம். பாடசாலைகளில் நிலவும் தளபாடப் பற்றுக் குறையை நீக்கவும் ஆவன

[7ம் பக்கம் பார்க்க]


# LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI.

**முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண்**
**யாழ். மாவட்டத்தினுள் தேடி எடுத்து லங்கா சீமெந்து லிமிட்டெட்டுக்கு விநியோகித்தல்**

எமது விரிவான ஆய்வின் பயனாக யாழ்ப்பாண மாவட்டத்தில் முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் இருப்பதாக அறியப்பட்டுள்ளது எனவே மேற்படி களிமண்ணை எமக்கு விநியோகிக்க ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் கீழ்க்கண்டவாறு எம்மைத் தொடர்பு கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

1. ஒப்பந்தக்காரர்கள் தங்கள் களிமண் எடுக்கும் பிரதேசத்தினைக் காட்டும் ஒரு சாதாரண வரைபடம் (LOCATION DRAWING) ஒன்றை அமைத்து கீழ்காணும் கேள்விப்பத்திரத்துடன் அனுப்பவேண்டும்.
2. வரைபடத்தில் காட்டப்பட்ட பிரதேசத்தில் எடுக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் பெயர், சுய விலாசமிட்டு எடுக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் கேள்விப்பத்திர இலக்கமான LCL/SU/T/01/86 குறித்து அரக்கு முத்திரையிட்டு 25-04-1986 காலை 10-30 மணிக்கு முன் கேள்விப்பத்திரத்துடன் 'உதவிப் பொதுமுகாமையாளர்' காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும்
3. ஒப்பந்தக்காரர்கள் வெவ்வேறு எத்தனை பிரதேசங்களிலும் இருந்து களிமண்ணை விநியோகிக்கலாம் ஆனல் களிமண் எடுக்கப்படும் ஒவ்வொரு பிரதேசத்தினதும் சாதாரண வரைபடத்துடன் (LOCATION DRAWING) ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் ஒவ்வோர் பிரதேசத்தில் இருந்தும் பெறப்பட்டு மேற்குறிப்பிட்டபடி பிரதேசத்தின் பெயர், ஒப்பந்தகாரரின் பெயர், சுய விலாசம், கேள்விப்பத்திர இலக்கம் என்பன எழுதப்பட்டு கேள்விப்பத்திர முடிவு நாளாகிய 25-4-86 காலை 10-30 மணிக்கு முன் எமது உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. (I) மேற்படி களிமண்ணை எடுக்கப்படும் பிரதேசத்தில் விநியோகிப்பதற்கான 1 தொன்னுக்கான விலைக்கூறு
(II) மேற்படி களிமண்ணை அப்பிரதேசத்திலிருந்து ஏற்றி எமது தொழிற்சாலைக்கு கொண்டுவந்து எமது களிமண்சாலையில் இறக்குதல் மதான் ஒன்றுக்கான விலைக்கூறு.
(III) நாள் ஒன்றுக்கு விநியோகிக்கக்கூடிய மிகக்குறைந்த தொகை களிமண் தொன்னில் மேற்படி விலைக்கூறுகளை தங்களால் தயாரிக்கப்பட்ட 2 பிரதிகள் கொண்ட படிவங்களில் தயாரித்து அரக்கு முத்திரை இடப்பட்ட 9''X4'' அளவு கொண்ட உறையில் இட்டு

"உதவிப் பொதுமுகாமையாளர்",
லங்கா சீமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை

என்ற விலாசமிட்டு உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்விப்பத்திர இலக்கமான LCL/SU/T/01/86 எழுதி 25-04-1986 காலை 10-30 மணிக்கு முன் உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்ப்பிக்கவும் மேற்படி கேள்விப்பத்திரங்கள் கேள்விப்பத்திர முடிவு நேரமாகிய 10-30 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும்.

மேற்படி விடயமாக மேலும் தகவல்களைப் பெற விரும்புவோர் விநியோக அதிகாரியை அவரது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் சந்திக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமுகாமையாளர்,
**லங்கா சீமெந்து லிமிட்டெட்,**
காங்கேசன்துறை.

09-04-1986. (A 432)



## பிரயாண ஒழுங்குகள்
**கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க்**

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர்
**21-ம் திகதி** உங்களை அழைத்துச்செல்வார்.
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**மத்திய கிழக்கு** நாடுகளில்
ஆண், பெண் இரு பாலாருக்கும்
வருமானத்திற்கேற்ற ஒழுங்குகள் உடனடியாக செய்துதரப்படும்.

**பாஸ்போட், BOND, ரிக்கற்**
முதலியனவும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

# GROUP ATLANTIC
HOSPITAL ROAD, JAFFNA.
(அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக)

(A 420)



# VACANCY

**MECHANICAL ENGINEER**
We are looking for a dynamic young Mechanical Engineer with BSc or equivalent qualifications and having minimum of 5 years practical experience in executive capacity.

The job will involve undertaking the mechanical design and fabrication of custom built plant and machinery for industrialists and entrepreneurs. Specific aspects include the cost estimation of projects and ensuring the quality of plant and machinery manufactured are of approved standard.

He will be responsible for organising and controlling projects and to formulate new strategy to promote sales.

We are able to offer successful applicant an attractive salary plus other fringe benefits.

**MARKETING EXECUTIVE**
We are looking for a Marketing Executive who will promote sale of the company by identifying prospective customers for our products.

He should have at least 5 years executive experience in private sector in the similar capacity.

The selected candidate will be rewarded with a negotiable package.

Apply To:
Managing Director,
**Promoters Engineering Company Ltd.,**
844, Point Pedro Road, Nallur, JAFFNA.

(A 560)

## சமய அறிவு போட்டி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மாமன்றம் அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய தீர்த்தோற்சவத்தன்று பாடசாலைப் பிள்ளைகளுக்கு இடையில் நடாத்திய சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு;-

மூன்றும் வகுப்பு:- செல்வி. ப. கோகிலராணி, செல்வி. செ. கேதீஸ்வரி, செல்வி. கு வனிதா, செல்வி. சி. கலைமகள், (நான்காம் வகுப்பு செல்வி. க. சோதிலெட்சுமி, தெ. தியாகேந்திரன், செல்வி. கி. பத்மசோதி, செல்வி. தி. சிவப்பிரியா. யோ. புவிரஞ்சன்.

ஐந்தாம் வகுப்பு:- செல்வி. செ. மகேஸ்வரி, சி சரவணகுகன், க. விக்கினேஸ்வரன் செல்வி க. சுமதி.

மத்திய பிரிவு:- செல்வி. பா. சாந்தி, செல்வி. தி. இராஜரூபினி, செல்வி. ச. பிரேமானந்தி, செல்வி. ப.பத்மயோதி. மேற்பிரிவு:- ந தயாசீலன், செல்வி. பாசாமினி, செல்வி இ. நளினி, சிறப்புப் பரிசு செல்வி. க. கலாரஞ்சினி.

## இருளின் மடியில் முள்ளியவளை

[முல்லைத்தீவு]

முள்ளியவளை மின்மாற்றி நிலையத்தில் மின்மாற்றி பழுதடைந்துள்ளதனால் மின்சாரம் இன்றி முள்ளியவளை தண்ணீரூற்று கிராமங்கள் இருட்டில் மூழ்கியுள்ளன.

இதுவரை மின்மாற்றி பழுது பார்க்கும் வேலைகள் ஆரம்பமாகவில்லை. எப்பொழுது மின்சாரம் வருமென மக்கள் தவிக்கின்றார்கள். முள்ளியவளையில் மின்சார வெட்டும் மின்மாற்றி பழுதும் தினசரி நடக்கும் செயலாக மாறிவிட்டன.

## தபால் ஊழியர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

வவனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த மெயில் பஸ்ஸில் பயணம் செய்த வவனியா தபால் நிலையச் சிற்றூழியர் இருவர் மாங்குளத்தில் வைத்து அண்மையில் சீருடையினரால் தாக்கப்பட்டனர். இவர்களில்ஒருவர்யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அனுராதபுரத்திலிருந்து வவனியாவுக்கு வந்திருந்த சுமார் 200 மெயில் பைகளை, யாழ். வ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த பஸ்ஸில், வவனியா தபால் நிலையத்தைச் சேர்ந்த ஒரு மெயில் உத்தியோகத்தரும் இருமெயில் போட்டர்களும், இருசிற்றூழியரும் ஏற்றிவந்தனர்.

சீருடையினர், பஸ்ஸில்வந்த சிற்றூழியரான எஸ். செல்லத்தம்பி, ஜனுப் எம். தகா ஆகியோரைச் தாக்கிய பின் அவர்களைச் செல்வதற்கு அனுமதித்தனராம். [க]

## இன்று இரத்ததானம்

[யாழ்ப்பாணம்]

வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இன்று 11ம் திகதி வெள்ளிக்கிழமை மூளாய் ஐக்கிய சங்க வைத்திய நிலையத்தில் இரத்ததானம்செய்யவுள்ளனர்.

## கச்சேரிக்கிளை ஒய்வூதியம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை வங்கியின் கச்சேரிக்கிளையில் ஒய்வூதியம் பெற்று வந்தவர்களுக்குரிய ஏப்ரல் மாதத்துக்கான ஒய்வூதியம் நாளையும், நாளை மறுநாளும் பிற்பகல் ஒரு மணிக்கு யாழ் கோட்டையிலுள்ள கொடுப்பனவுக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. (மா)

## பெண்கள் உட்பட 118 பேர் கைது

[மட்டக்களப்பு]

தீவிரவாதிகட்கு உணவு சமைத்துக் கொடுத்ததாகவும் மற்றும் உதவி ஒத்தாசைகள் புரிந்ததாகவும் தகவல்கிடைத்ததைத்தொடர்ந்து 25 க்கு மேற்பட்ட பெண்கள் உட்பட 118 பேர் அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்

ஏறூவூர் பொலிஸ் பிரிவிலுள்ள தளவாய், பன்குடாவெளி, ஆயித்தியமலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்,

கைது செய்யப்பட்ட பெண்களும் ஆண்களும் கரடியனாறு கிரான் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (மா)

AMERICAN TRAVELS
அழைக்கிறது
ஜேர்மனி இத்தாலி
பிரான்ஸ் ஹோலன்ட்
ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் ஜெகதாஸ் உங்களை நேரடியாக அழைத்துச்செல்வார்.
ஏப்ரல் 16-ம் திகதிக்கு முன் உங்கள் பாஸ்போட்டை எம்மிடம் ஒப்படைக்கவேண்டும்.
ஏப்ரல் 28-ம் திகதி உங்களை எமது முகவர் அழைத்துச்செல்வார்.
துரிதகதியில் பாஸ்போட், பொன்ட் செய்துகொடுக்கப்படும்.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
திரு றேட் சென்ரர்,
பலாலி றேட், கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (C 1699)

## நாளை பாராட்டு விழா

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஆசிரியை திருமதி ஞா. துரைரத்தினம் அவர்களின் சேவையைப் பாராட்டு முகமாக நாளை கல்லூரியில் விழா நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க. நாகராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவை மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

## வீடமைப்புக் கடன் 632 விண்ணப்பம் தெரிவு

[யாழ்ப்பாணம்]

நகர வீடமைப்பு உப திட்டத்தின்கீழ் கடன் வழங்கல் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 632 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் திரு சீ. வி. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் 27ம் திகதி வீடமைப்புச் சமூக அபிவிருத்திக்குழுவினால் பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே அவர்கள் சிபார்சு செய்ததாகவும் உரியவர்களின் பெயர் விபரங்களை அம்மன் வீதியிலுள்ள தமது அலுவலகத்தில் பார்வையிடலாம் என்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (மா)

நன்றி நவிலல்
புன்னாலைக்கட்டுவன்
காலஞ்சென்ற
முதலியார்
சோமசுந்தர ஐயர்
அவர்களின்
கனிஷ்ட புத்திரன்
செல்வன்
சூரியநாராயணனின்
[பொலிஸ் பிரிவு
மெக்கானிக்]
ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம். அன்னாரின் அஸ்தி-சபிண்டீகரண - கிரகயக்ஞக்கிரியைகள் 13 14, 15, 16-4-86 திகதிகளில் நடைபெறும்.
இங்ஙனம்,
முதலியார்
சோமசுந்தர ஐயர்
குடும்பத்தினர்.
(C 1682)

88-ம் ஆண்டிற்கான விஞ்ஞான மாணவர்களுக்கு!
3-ம் குறுக்குத் தெருவில் நடைபெறும் இரசாயன வகுப்புக்களுடன் பின்வரும் திறமையும் அனுபவமும் உள்ள யாழ் நகர் பிரபல்ய ஆசிரியர்கள் இணைந்து தங்களது பிரத்தியேக வகுப்புகளை நடத்துகின்றனர்.
12-4-86 அன்று 12-00 மணிக்கு ஆரம்பமாகும் இரசாயன வகுப்புக்களுடன் ஏனைய ஆசிரியர்களின் 2-ம் பிரிவு ஆரம்பமாகவுள்ளன.
விலங்கியல் — தம்பிராஜா
Sat., Sun. 10-30 a. m. (12-4-86)
தாவரவியல் — சிவவீரசிங்கம்
Wed. 10-00 a. m. (16-4-86)
பௌதீகம் — சௌந்தி
Sat., Sun. 1-00 p. m. (19-4 86)
தூய, பிரயோக கணிதம் — பிரேம்நாத்
Sat., Sun. 2-00 p. m. (12-4-86)
★ குறிப்பு: தனித்துவம் நிறைந்த ஆசிரியர்கள் இணைந்து நடாத்தும் ஒரே நிறுவனம்.
[C 1706]

## சீரணி மஹோற்சவம்

[பண்டத்தரிப்பு]

சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம்இம்மாதம்15-ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 24ம் திகதி காலை தேர்த்தோற்சவமும் மாலை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

## தேசிய இளைஞர்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்வோம்.

''நிஸ்கோ சுய உதவித் திட்டத்தின் கீழ் கடன் வசதிகளையும் அளிக்கிறோம். எமது மாவட்ட நிலைமைகளை அனுசரித்து இளைஞர் யுவதிகளுக்கு ஒரு நல்லுறவுப் பாலமாகவும் வழிகாட்டியாகவும் நாம் விளங்குகிறோம்.''

முதலாம் வருட நினைவஞ்சலி

அமரர்
மா. மகாதேவன்
(இளைப்பாறிய அதிபர்,
யா/மகாஜன கல்லூரி,
தெல்லிப்பழை,
யா/கொக்குவில் இந்துக்
கல்லூரி, கொக்குவில்.)
கல்வியாற் சிறந்தீர்
என்றே
கற்றவர் போற்ற
வாழ்ந்தீர்
சொல்லரும் அன்பினாலே
சுற்றத்தோர் மதிக்க
வாழ்ந்தீர்
நல்லவை அனைத்தும்
செய்தீர்
கண்ணெனக் காத்தீர்
எம்மை
அல்லல் நாம் எய்தச்
சென்றீர்
அவனியில் மறப்போமோ
நாம.
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.
மனைவி, பிள்ளைகள்.
சுதுமலை தெற்கு.
மானிப்பாய்.
[C 1595]

5-ம் வருட நினைவஞ்சலி

கணபதிப்பிள்ளை
சிவதாஸ்
(பூக்குட்டி)
மலர்வு: 19-12-1947
மறைவு: 6-4-1981
திதி: 11-4-1986
அன்புச் செல்வமே!
நீர் எங்களைப் பிரிந்து அரனடி சேர்ந்து ஐந்து வருடங்கள் சென்றாலும் நாங்கள் உமது ஆன்மா சாந்தியடைய என்றும் மறவாது பிரார்த்திக்கின்றோம்.
பெற்றோர்,
சகோதரன்,
சகோதரிகள்,
உறவினர்கள்.
உரும்பிராய் வடக்கு,
(C-1686)

மலிவு விற்பனை
SVP சிவம் ஸ்தாபனத்தாரின்
புதுவருட மலிவு விற்பனை
சகலவிதமான புடவை வகைகளும்,
சிறுவர், சிறுமிகளுக்கான தயாரித்த உடுப்பு வகைகளும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
SVP சிவம்,
(நவீன சந்தை),
14 A, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C 1679)

## தாதிமாருக்கு ஆதரவாக உண்ணுவிரதம் இருந்த பிக்குமார்கடத்தப்பட்டனர்!

[கொழும்பு]

உண்ணுவிரதமிருந்த ஐந்து பௌத்த மத பிக்குகள் இனந் தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இந்த ஐந்து பௌத்த மத பிக்குகளும் அரசாங்க வைத்தியசாலைத் தாதிமாரின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் துங்முல்ல சந்தியிலுள்ள புத்தர் சிலைக்கு முன்பாக நேற்றுமுன் தினம் தொடக்கம் உண்ணுவிரதம் இருந்தனர் என்றும் நேற்று அதிகாலையே இவர்கள் கடத்தப்பட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. [பி]

## மூதூரில் ராணுவத்தின் காட்டுமிராண்டிச் செயல்!

(திருகோணமலை)

மூதூர் கடற்கரைச் சேனையில் இடம்பெற்ற சம்பவத்தின் போது 29 வயதுள்ள இரு பிள்ளைகளின் தாய் ஒருவர் மானபங்கத்துக்குள்ளாகவும் அதேசமயம் ஆண் ஒருவரும் பெண்களின் மத்தியில் நிர்வாணமாகப்பட்டுத் தாக்குதலுக்குள்ளானதாகவும் தெரியவருகிறது.

பாதிக்கப்பட்டுள்ள பெண் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளாராம்

இப்பயங்கர சம்பவத்திலீடுபட்டதாகக் கூறப்படும் ஆயுதப்படையினர் துப்பாக்கியால் ஆகாயத்தை நோக்கிச் சுட்டு அங்குள்ள ஆண்களை விரட்டினராம். அச்சமயம் அங்கு வந்த க. செல்லையா (52 வயது) என்பவர் ஆயுதப்படையினரிடம் அகப்பட்டதைத் தொடர்ந்துஅவர் பலமாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## டானியல்: 60வது ஆண்டு நிறைவு விழா

[யாழ்ப்பாணம்]

அமரர் கே. டானியலின் அறுபதாவது ஆண்டு பிறந்த நாள் நிறைவுவிழா எதிர்வரும் 15ம் திகதி செவ்வாயன்று அன்னாரது இல்லத்தில், தினகரன் பிரதம ஆசிரியர் திரு இ. சிவகுருநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை 'கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்' செய்துள்ளார்கள் இவ்விழாவில் நடிகமணி வி வி வைரமுத்து, திருமதி மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி கோ கிருஷ்ணராசா, கலாநிதி சி மௌனகுரு, திரு. நா. சோமகாந்தன், செங்கை ஆழியான், திரு. சபாரத்தினம் [சசிபாரதி] ஆகியோர் உரையாற்றுவார்கள். [பி]

## சென்னை வானொலியில் தேவாரப் பண்ணிசை

[யாழ்ப்பாணம்]

தேவாரப் பண்ணிசை நிகழ்ச்சி எதிர்வரும் 13ம் திகதி ஞாயிறன்று காலை சென்னை வானொலி நிலையத்தில் பக்தி மலர் என்னும் நிகழ்ச்சியில் இடம்பெறவுள்ளது

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தாரின் வேண்டுகோளையடுத்தே மேற்படி நிகழ்ச்சியை நடத்த சென்னை வானொலி நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## பாலர் ஆசிரியர்கள்

[யாழ்ப்பாணம்]

பாலர் ஆசிரியர் சங்கம் நடாத்திய பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி 1985 - 1-வது தொடரில் பயிற்சி பெற்றுப் பாலர் அசிரியர் தராதரப் பரீட்சையில்சித்தியெய்தியபாலர் ஆசிரியைகள் பின்வருமாறு:

செல்விகள் மாலாதேவி ஐயாத்துரை - சித்தன்கேணி, வசந்தகுமாரி அருள் நல்லூர், கமலினி பரமநாதன் - யாழ்ப்பாணம், கோகிலா வரதராஜா சுழிபுரம், சாந்தினி சிவராமலிங்கம் - உடுவில், வசந்தராணிதுரைசிங்கம்-பண்டத்தரிப்பு, லோகநாயகி அம்மா சின்னத்தம்பி - நல்லூர், நாகஜோதி கோபால் நல்லூர், மேனகா கிருஷ்ணபிள்ளை நாரந்தனை, வசந்தராணி காசிப்பிள்ளை - மயிலிட்டி, மேரிரூஸ் அலெக்சாண்டர் - யாழ்ப்பாணம், கேதாரபூராணி குமாரவேலு- திருநெல்வேலி, ஸ்ரீகலா சுந்தரராஜா-சுதுமலை, லிங்கேஸ்வரி இளையதம்பி - சுன்னாகம், அனுசியாதேவி துரைராஜசிங்கம் - காங்கேசன்துறை, கலாவேலாயுதபிள்ளை - சித்தன்கேணி, ஸ்ரீராஜினி ரத்தின சபாபதி-யாழ்ப்பாணம், மலர்விழி தம்பிராஜா வட்டுக்கோட்டை, மேரி வயலட் செல்வநாயகம் - சங்குவேலி, சுமதி துரைராஜா- காங்கேசன்துறை, வாசுகி ஞானசுந்தரம் - உரும்பிராய், நிர்மலா பாலகிருஷ்ணன்- கொக்குவில், மாலதி குணரத்தினம - கொக்குவில் லீலாவதி கனகரத்தினம் - அரியாலை, சகுந்தலாதேவி கிருஷ்ணதேவா - மானிப்பாய், கமலாகுமாரி நடராஜா- யாழ்ப்பாணம், ஜெயாழினி முருகையா - காங்கேசன் துறை, புஸ்பகலா இரத்தினம் காங்கேசன்துறை, கிருஸ்டபெல்டேவிற் - கொக்குவில், திருமதி வைதிகவனஜா செல்வரட்ணம்-யாழ்ப்பாணம்.

## மாதாந்தக் கூட்டம் நடத்துமாறு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

வட பிராந்திய போக்குவரத்து சபையின் சகல டிப்போக்களிலும், பஸ் பிரயாணிகள் சங்கங்களின் மாதாந்தக் கூட்டங்களை நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் நிறைவேற்று முகாமையாளரை வட இலங்கை பஸ் பிரயாணிகள் சங்கம் கேட்டுள்ளது

கடந்தசில வருடங்களாக பஸ் பிரயாணிகள் சங்கங்களை அழைத்து ஆலோசனைக் கூடடங்கள் நடாத்தப்படவில்லையென்றும் தற்போது வ. போ. ச பஸ் சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கு இதுபோன்ற பொதுமக்களின் ஸ்தாபனங்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் என்றும் மேற்படி சங்கச் செயலாளர் திரு. செ. குமாரசாமி தமது மகஜரில் சுட்டிக் காட்டியுள்ளார்

## வசந்தகுமாருக்கு என்ன நடந்தது?

(வவனியா)

கைதான 3 பிள்ளைகளின் தந்தையான தர்மலிங்கம் வசந்தகுமார் (24 வயது) எங்கே?

கைதான இவர் அடுத்த தினமே விடுவிக்கப்பட்டதாக ஆயுதப்படையினர் தெரிவித்துள்ளனர்.

பண்டாரிகுளத்தைச்சேர்ந்த வியாபாரியான இவர் சடந்த 20ம் திகதி வவனியா ஆஸ்பத்திரிக்குச் சென்ற வேளை அங்கு பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டார் என இவரது மனைவி புகார் தெரிவித்துள்ளார்

## யாழ். மாவட்டப் பண்பாட்டுக் குழு

[யாழ்ப்பாணம்]

சகல கலாசார பண்பாட்டுத் துறையினர் அனைவரினதும் ஆலோசனையையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்காக, யாழ் மாவட்டத்தை உள்ளடக்கிய பண்பாட்டுக்குழுஒன்று நேற்று அமைக்கப்பட்டது.

யாழ். அரசாங்க செயலகத்தில், அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் இக்குழு அமைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தை உள்ளடக்கிய மத்திய கலாசார மன்றம் ஒன்று அமைப்பது பற்றியும், உபகுழுக்களை அமைத்து அவற்றின் ஆலோசனைகளைப் பெற்றுச் செயல்படுவது பற்றியும் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

கடந்த சில வருடங்களாக கலாசாரத்திற்குரிய நிதி சூழ்நிலை காரணமாகப் பயன்படுத்த முடியாமல் போய்விட்டதாகவும். இவ்வருடத்திற்குரிய நிதியைப் பயன்படுத்த இக்குழு வழிகாட்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த கூட்டத்தை மே 10ம் தேதி கூட்டுவதென்று முடிவுசெய்யப்பட்டது. [சு]

இபபத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு வி. செ சுவாமிநாதன் மே மாதம் 2-ம் திகதி தொடக்கம் கிளிநொச்சித் திட்டமிடல் பணிமனையின் தலைவராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

## ஆசிரிய நியமனசேவை முன்பயிற்சி* நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியோர் கவனத்திற்கு..

(கொழும்பு)

ஆசிரிய நியமன சேவை முன் பயிற்சி இம்மாதம் 16ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்விச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது

இப்பயிற்சி நெறியே இறுதிப் பகுதியாக இருப்பதால் இப் பயிற்சி நெறிக்குசமூகமளிக்கத் தவறியோருக் குமேற்கொண்டு எந்தவகையிலும் நியமனம் பெற வாய்ப்பளிக்கப்படமாட்டாது என்று கல்விச்சேவை ஆணைக்குழு முடிவு செய்திருப்பதாக இலங்கை ஆசிரியர்காங்கிரஸ் செயலாளர் திரு. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1985ம் ஆண்டு ஆசிரிய நியமனம்பெற நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் சிலருக்கு கல்விச்சேவை ஆணைக்குழு சேவை முன்பயிற்சி அளித்து நியமனம் வழங்க கடிதங்கள் அனுப்பியிருந்தும் கடிதம் கிடைக்காமை, பிரயாண வசதியின்மை போன்ற இன்னோரன்ன காரணங்களினால் பயிற்சியில் பங்குபற்றியும்நியமனம் பெறுதுள்ளனர்.

இதில் ஆரம்ப விஞ்ஞான, கணித. பட்டதாரி, சங்கீத நடன டிப்ளோமா தராதர ஆசிரிய நியமனம் பெறுவோர் அடங்குவர். இப்படியானோர் எம்மிடம் முறையிட்ட காரணத்தினால் தவறுப்பட்ட சகல தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கும், கடிதங்களைக்கல்விச் சேவை ஆணைக்குழு அனுப்பியுள்ளது. இப்படியானோருக்கு இதுவரை கடிதம் கிடைக்கவில்லையாயின் கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு நேரடியாகச் சென்று கடிதத்தைப் பெற்றுஇம்மாதம் 15ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறியைப்பின் பற்றலாம்''

## அந்த ஊர்காவல் படையினர் கைதாகலாம்!

(மட்டக்களப்பு)

காத்தான்குடி ஊர்காவல் படையினரால் தாக்கப்பட்டு, அவமானப் படுத்தப்பட்ட முஸ்லிம் பாடசாலை அதிபரின் புகார் குறித்து பொலிஸ் உயர் மட்ட விசாரணை நடைபெற்று வருகிறது.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ஊர்காவல் படையினர் கைது செய்யப்படலாமென பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காத்தான்குடி 6ம் குறிச்சியைச் சேர்ந்த முஸ்லிம் பாடசாலை அதிபரும், அங்குள்ள முஸ்லிம் மாணவர் அநாதை இல்லத் தலைவருமான அல் ஹாஜ் எம். எம். எம். ஏ, அசூஸ் ஹாஜியார் கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவல் படையினரால் கைதுசெய்யப்பட்டு பிரதானவீதிவழியாக அவமானப்படுத்தப்பட்டது சம்பந்தமாகக் காத்தான்குடிக் கிராமத்தில் பலத்த ஆட்சேபம் எழுந்துள்ளது. [மா]

## மரண அறிவித்தல்

### மேரி மக்டலீன் செல்வம் செகராஜசிங்கி

செகராஜசிங்கி மேரி மக்டலீன் செல்வம் யேசுவில் மரித்தார். இவர் காலஞ்சென்ற ஜோன் கிறிசோஸ்ரம் செகராஜசிங்கியின் அன்பு மனைவியும், ஜெயம் (இளைப்பாறிய தபால் அதிபர்), ஜீவம் சட்டத்தரணி), றஞ்சிதம் (பங்களூர்), இந்திரம (U. K.), கீதம் (ஆசிரியை, திருக்குடும்பகன்னியர் மடம், கொழும்பு). மதுரம் (ஆசிரியை திருக்குடும்பகன்னியர் மடம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற அரியம், பவனிதம் (U K), வைத்தியகலாநிதி ஈஸ்வரம் (U.K.). நிமலம் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும்) ஜூலியற், திலகா, H M ஏணஸ்ற் (Retd UNDP, பங்களூர்), வைத்திய கலாநிதி திருமதி றீற்று (U K), E. R. ஜோசப் (Radiographer, மகரகம), R F. தம்பிநாயகம விவசாய அதிகாரி, மட்டக்களப்பு), W. J சேவியர் (U K), ஷாமேயின் (U,K), V ஜெகநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 13-4-86 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணியளவில் பரி கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு அவரது இல்லம் 'செகவாசா', 57, வேம்படிவீதியிலிருந்து எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுடன் ஏற்றுக்கொள்ளவும் தகவல்: J J. C.செகராஜசிங்கி [C 1714]

### றேமண்ட் ஏபிரகாம்பிள்ளை

நாரந்தனையைப் பிறப்பிடமாகக்கொண்ட றேமண்ட் ஏபிரகாம்பிள்ளை காலமானார் இவர் ஞானம்மாவின் அன்புக்கணவரும், மரியாம்பிள்ளை (K. K. S.) பேனடெற் (Retd. Teacher, நாரந்தனை). வின்சஸ்லோஸ் (முதலியார், பருத்தித்துறை), ஜோர்ஜ் (ஒட்டகப்புலம்), சாள்ஸ் (Water Supply). லின்டா, சந்திரா, சரோஜா (Germany), பொறியியலாளர் மரியதாஸ் (Nigeria, டாக்டர் ஸ்ரான்னிஸ்லோஸ் (London) ஆகியோரின் அன்புத்தந்தையாரும், மரியம்மா, அன்ரனிப்பிள்ளை (அதிபர், தம்பாட்டி), பிலோமினா (ஆசிரியை, அச்சுவேலி)' மணி, மாகிறற் (ஆசிரியை, பண்டத்தரிப்பு), சேவியர், ராசநாயகம் அசோகன், அன்னராணி, லலிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், மாலா, மகேந்திரன், சுரேஸ், யூட், யூலி, செல்வன், றீகன், பபி, ஞானசேகரம், சாந்தி Ceynor Jaffna), எறித் ஜெயந்தி, பாபு, ஆனந்தி, சுனீத்தா, நிக்சன், விஜி, கிற்றோ, மினோ, ரோனி, தயாளன். நீல், கிஷோக், ரிஷி ஆகியோரின் அன்புப் பேரனும், வினோதனின் பூட்டனுமாவார். அன்னாரின் பூதவுடல் 12-4-86 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லடக்கத்திற்காக அன்னாரின் இல்லத்திலிருந்து நாரந்தனை புனித சம்பேதுவானவர் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். (C 1700)